இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 125 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 29 – சனிக்கிழமை 14 டிசம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 125 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 29 - Saturday 14 December 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர அதிகாரிகளுக்கு அறிவுரை !

# எந்த மழையையும் அரசு சமாளிக்கும் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டபின் பேட்டி !



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்துவருவதையொட்டி, மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா ஆகியோரிடமும் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

**சென்னை, டிச.14-**

**‘மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது’ என்றும் ‘எந்த மழையையும் அரசு சமாளிக்கும்’ என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்ட பின் அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.12.2024) சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் நேற்று முதல் கனமழை பெய்துவருவதையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, ஆகியோரிடமும் மற்றும் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் ஆய்வு மேற்கொண்டார்.

### காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு!

கடந்த 7.12.2024 அன்று வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி 10.12.2024 அன்று ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. அது பின்னர் இலங்கை மற்றும் தமிழ்நாடு கடலோரப் பகுதிகளை நோக்கி வரத்தொடங்கி தற்போது மன்னார் வளைகுடா பகுதியில் நிலவி வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதுதொடர்பாக, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள கடிதம் வாயிலாக அறிவிக்கப்பட்டதோடு 10.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள், சென்னை மாநகராட்சி ஆணையர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட 17 மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி காட்சி வாயிலாக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கேட்டறிந்து தகுந்த அறிவுரைகளை வழங்கினர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கன மற்றும் மிக கனமழை பெற வாய்ப்பு உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அலுவலர்கள்அனுப்பி வைக்கப்பட்டு, கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

### மீட்பு நடவடிக்கை அதிகாரிகளுக்கு அறிவுரை!

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 12.12.2024 இரவு 8.30 மணி அளவில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக கலந்துரையாடி நிலைமையை கேட்டறிந்து, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கினார்.

நேற்று (13.12.2024) காலை 8.30 மணி நிலவரப்படி, சராசரியாக, தென்காசியில் 16.3 செ.மீ., அரியலூரில் 15.9 செ.மீ., மயிலாடுதுறையில் 14.6 செ.மீ., திருநெல்வேலியில் 10.5 செ.மீ., தூத்துக்குடியில் 9.8 செ.மீ., கடலூரில் 9.5 செ.மீ., பெரம்பலூரில் 9.3 செ.மீ., விருதுநகரில் 7.3 செ.மீ., தஞ்சாவூரில் 7.2 செ.மீ., காஞ்சிபுரத்தில் 7.2 செ.மீ., திண்டுக்கல்லில் 6.7 செ.மீ., திருவாரூரில் 6.5 செ.மீ., செங்கல்பட்டில் 6.3 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

### கடந்த 24 மணி நேரத்தில் அதிக மழைப்பொழிவு

திருநெல்வேலி, அரியலூர், கடலூர், தென்காசி, தூத்துக்குடி, மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 20 செ.மீ. முதல் 50 செ.மீ. வரை 49 இடங்களில் அதி கனமழை பெய்துள்ளது.

மேலும், 10 செ.மீ. முதல் 20 செ.மீ. வரை 139 இடங்களில் மிக கனமழையும், 6.5 செ.மீ. முதல் 10 செ.மீ. வரை 217 இடங்களில் கனமழையும் பெய்துள்ளது.

நேற்று முதல் பூண்டி, பிச்சாட்டூர் மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்களில் இருந்து தகுந்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகளுடன் உபரி நீர் திறக்கப்பட்டது. நேற்று (13.12.2024) செம்பரம்பாக்கம், புழல் மற்றும் சேத்தியார்தோப்பு ஏரிகளிலிருந்து உபரி திறப்பது குறித்து உரிய எச்சரிக்கை அளிக்கப்பட்ட பின்னர் திறந்து விடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதத் திட்டம்!

# ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**புதுடெல்லி, டிச.14-**

**‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ சட்ட முன்வடிவிற்கு ஒன்றிய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த வாரம் நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்த சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**இந்நிலையில் இந்த சட்ட முன்வடிவிற்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்து சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

இந்தியாவில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு சட்டமன்றத்தின் பதவிக் காலம் முடிவடை யும் காலத்திற்கு ஏற்ப தேர்தல் நடைபெறுகிறது.

இதனால், அடிக்கடி தேர்தல் நடைபெறுவதால் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை எனக் கூறிய ஆளும் பாஜக அரசு நாடு முழுவதும் ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டத்தை செயல்படுத்த முனைப்பு காட்டி வருகிறது. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நடப்பு நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

### பல சவால்கள் உள்ளன!

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ தொடர்பாக பல்வேறு சாதக பாதக அம்சங்கள் கூறப்பட்டாலும், இதை அமல் படுத்துவதில்பலசவால்கள்உள்ளன.

ஒரே நாடு ஒரே சட்டத்தை அமல் படுத்த அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வர வேண்டியது அவசியம். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருந்



தால்தான் இதை நிறைவேற்ற முடியும்.

அது‘மட்டும் இன்றி நாட்டில் உள்ள மொத்த மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட மாநிலங்கள் இதை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்க வேண்டும். அரசியல் அமைப்பு சட்டம் பிரிவுகள் 83, 85(2)b, 174, (2)(B), 356 மற்றும் 75(3) ஆகியவற்றில் திருத்தம் செய்ய வேண்டும். மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 லும் முக்கிய திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியம்.

### நடைமுறைச் சிக்கல்கள்!

அதுமட்டும் இன்றி நாடு முழுக்க ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்றால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பெருமளவில் தேவைப்படும். பாதுகாவலர்கள் எண்ணிக்கையும் அதிகம் தேவைப்படும். இதுபோன்ற பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன.

இந்த மசோதா நிறைவேறி எல்லாம் சரியாக நடந்தால் அடுத்த 2029-ல் ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்தப்பட வாய்ப்புள்ளது.

ஆனால் தற்போதைய பா.ஜ.க. கூட்டணி அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு!

இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய ஜனநாயகத்தின் மீதான இத்தாக்குதலை நம் ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டி எதிர்ப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ சட்ட முன்வடிவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கொடுங்கோன்மைக்கு வழி வகுக்கும், ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ சட்ட முன்வடிவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

**நடைமுறைக்கு ஒவ்வாத, மக்களாட்சிக்கு எதிரான இந்த நடவடிக்கை; மாநிலங்களின் குரலை அழித்துவிடும்; கூட்டாட்சியியலைச் சிதைத்துவிடும்; அரசின் ஆட்சி நிர்வாகத்துக்குத் தடையினை ஏற்படுத்தும்.**

### எழுக இந்தியா!

**இந்திய ஜனநாயகத்தின் மீதான இந்தத் தாக்குதலை நம் ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டி எதிர்ப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## உலக செஸ் சாம்பியன்

# குகேஷுக்கு ரூ.5 கோடி பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, டிச. 14 -**

**‘உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த டி.குகேஷ் அவர்களுக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்’ என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையிலான அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறைக்கு சிறப்பான முக்கியத்துவத்தை அளித்து வருகின்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து, பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் தமிழ்நாட்டில் அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் தமிழ்நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு மிகச்



சிறப்பாக திட்டமிட்டு, நடத்தப்பட்டன. அதில் பங்குபெற்று வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து வீரர்களையும் முதலமைச்சர் அவர்கள் நேரில் அழைத்துப் பாராட்டி, பரிசுகளை வழங்கினார்.

தற்போது சிங்கப்பூரில் நடைபெற்ற உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் (FIDE World Championship 2024) தமிழ்நாட்டைச் சேர்ந்த டி.குகேஷ் அவர்கள் நேற்று நடப்பு சாம்பியனான சீனாவின் டிங் லிரென் அவர்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று உலக செஸ் சாம்பியனாக வாகைசூடி சாதனை படைத்து, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த டி. குகேஷ் அவர்களை முன்னதாக தனது எக்ஸ் தளத்தில் பாராட்டி வாழ்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டிருந்ததோடு, தொலைபேசி வாயிலாகவும் அவரைத் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ள குகேஷ் அவர்களுக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட வேண்டுமென்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். அதனையேற்று, டி.குகேஷ் அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவருக்கு 5 கோடி ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.